# போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு கிர்கெட் வீரர் முரளி பரிசுகளை வழங்கினார்

பெரியபாளையம், பிப்.5-

கும்மிடிப்பூண்டியில் உள்ள காந்தி உலக அறக்கட்டளையின் சார்பாக நடைபெற்ற பல்வேறு போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு முன்னாள் ரஞ்சி கிரிக்கெட் வீரர் முரளி நினைவு பரிசு வழங்கி சிறப்புரை ஆற்றினார். தேசப்பிதா என்றழைக்கப்படும் மகாத்மா காந்தியின் நினைவு நாள் கடந்த 30-ந் தேதி உலகம் முழவதும் கடைபிடிக்கப்பட்டது. இதை முன்னிட்டு திருவள்ளூர் மாவட்டம் புதுகும் மிடிப்பூண்டியில் உள்ள காந்தி உலக அறக்கட்டளையின் சார்பாக காந்திஜியை நினைவு கூறும் வகையில் மாணவ மாணவிகள் மற்றும் குழந்தைகளுக்கான கட்டுரைப் போட்டி ஓவியப்போட்டிபேச்சுப்போட்டிஒப்புவித்தல்சைக்கிள் ஓட்டும் போட்டி என்று ஒன்பது வகை போட்டிகள் நடத்தப்பட்டது. இப்போட்டியில் பங்கேற்ற 160 பேருக்கும்





ஜாமன்ட் பாக்ஸ் மற்றும் நினைவு பரிசு வழங்கப்பட்டது. மேலும்முதல் மூன்று இடங்களை பிடித்தவர்களுக்கும் பரிசு வழங்கப்பட்டது.நடைபெற்ற இந்நிகழ்ச்சிக்கு காந்தி உலகஅறக்கட்டளையின் நிறுவனர்

எம்.எல்.ராஜேஷ் தலைமை தாங்கினார். அறக்கட்டளையின் மேலாண்மை உறுப்பினர் ஆர்.விஜயலட்சுமி முன்னிலை வகித்தார்.காந்தியின் வரலாறு குறித்து குழந்தைகளுக்கு புரோம் ஜெயின் எடுத்துக்கூறினார். சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்ட முன்னாள் ரஞ்சி கிரிக்கெட் வீரர் முரளி பல்வேறு போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு நினைவு பரிசு வழங்கி சிறப்புரை ஆற்றினார். முன்னதாக அனைவரையும் அறக்கட்டளையின் உறுப்பினர் திலீப்குமார் ஜெயின் வரவேற்றார்.முடிவில் அறக்கட்டளையின் உறுப்பினர் வக்கீல் ஷியாம் சுந்தர் நன்றி கூறினார்.